சுற்றறிக்கை இலக்கம்: 11/2002

எனது இலக்கம் - எம்/ 4
பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 280, பிரதான வீதி,
கொழும்பு 11.
2003.01.15

அனைத்து விவாக, பிறப்பு மற்றும்
இறப்புப் பதிவாளர்களுக்கு,

**<u>சிறுவர்களின் திருமணங்களைப் பதிவு செய்தல்</u>**

1995 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட விவாக (பொது) பதிவுச் சட்டத்தின் 15 ஆம் பிரிவின்படி, திருமணத்திற்கான குறைந்தபட்ச வயது 18 ஆண்டுகளாகத் திருத்தப்பட்டுள்ளது. இதன்படி, 18 வயதுக்குட்பட்ட எந்தவொரு ஆண் அல்லது பெண் இற்கு திருமணம் செய்வதற்கு சட்டரீதியாக இடமில்லை.

02. அவ்வாறிருந்தும், சில விவாக பதிவாளர்களால் 18 வயதுக்குட்பட்ட நபர்களின் திருமணங்கள் பதிவு செய்யப்படுவதாக எனக்குப் புகார்கள் கிடைத்துள்ளன. இவ்வாறு சிறுவர் திருமணங்களைப் பதிவு செய்தமை காரணமாக, ஏற்கனவே சில விவாக பதிவாளர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இது விவாக பதிவாளர் பதவியின் கௌரவத்திற்குப் பாதிப்பை ஏற்படுத்துவதுடன், திணைக்களத்திற்கும் அவப்பெயரைத் தேடித்தருகின்றது.

03. எனவே, திருமணங்களைப் பதிவு செய்யும் போது பதிவாளர்கள் தரப்பினரின் வயது குறித்து விசேட கவனம் செலுத்த வேண்டும் என்பதுடன், 18 வயது பூர்த்தியடையாத எந்தவொரு நபரினதும் திருமணத்தைப் பதிவு செய்வதைத் தவிர்க்க வேண்டும் என வலியுறுத்துகின்றேன். தரப்பினரின் வயது குறித்து ஏதேனும் சந்தேகம் ஏற்படுமாயின், அவர்களின் அடையாள அட்டைகள் அல்லது பிறப்புச் சான்றிதழ்கள் மூலம் வயதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என அறியத்தருகின்றேன்.

04. 18 வயதுக்குட்பட்ட நபர்களின் திருமணங்களைப் பதிவு செய்வது தொடர்பாக எனக்குப் புகார்கள் கிடைத்தால், சம்பந்தப்பட்ட பதிவாளர்களுக்கு எதிராக மிகவும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தயவுடன் அறியத்தருகின்றேன்.

05. இச்சுற்றறிக்கை கிடைத்தமையை உறுதிப்படுத்தவும்.

(ஒப்பம்)

பதிவாளர் நாயகம்

பிரதிகள்:

1. செயலாளர், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு - தகவலுக்காக
2. அனைத்து மாவட்ட செயலாளர்கள் / மேலதிக பதிவாளர் நாயகங்கள்
3. அனைத்து பிராந்தியங்களுக்குப் பொறுப்பான உதவிப் பதிவாளர் நாயகங்கள்
4. பிரதேச செயலாளர் / மாவட்டப் பதிவாளர்
5. காணிப் பதிவாளர் மற்றும் மேலதிக மாவட்டப் பதிவாளர்
6. நாடு தழுவிய பிறப்பு மற்றும் இறப்புப் பதிவாளர்கள் சங்கம்